செ.வெ.எண்: 30 நாள்: 12.01.2026

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

திருநங்கைகள் தினம் என அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 15 ஆம் தேதியன்று திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து அவர்களுள் முன்மாதிரியாக திகழும் திருநங்கைகளை சிறப்பிக்ககும் வகையில் 2026-ஆம் ஆண்டுக்கான "சிறந்த திருநங்கைக்கான விருது" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருது பெறும் சாதனையாளருக்கு ரூ.1,00,000/- க்கான (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

அதன்படி, சாதனை புரிந்த திருநங்கைகள் இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்கள் அனைத்தும் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) 31.01.2025 க்குள் பதிவேற்றம் செய்து, பதிவேற்றம் செய்த உரிய ஆவணங்களுடன் அதற்கான கருத்துருவினை, கையேடாக (Booklet) தயார் செய்து புதுக்கோட்டை மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 03.02.2025-க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

**தகுதிகள்:-**

1. அரசாங்கத்தின் உதவி பெறாமல் தனது வாழ்க்கையை கட்டமைத்துக்கொண்ட திருநங்கைகள்.
2. திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து, குறைந்தப்பட்சம் 5 திருநங்கைகள் தங்களது வாழ்வாதார ஆதரவைப் பெறவும், கண்ணியமான வாழ்க்கையை நடத்தவும் உதவிபுரிந்த திருநங்கைகள்.
3. தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது.

மேற்படி, தகுதியான நபர்களின் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடன் வரப் பெற வேண்டும். மாநில அளவிலான உயர் மட்டக்குழு விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய, விருதுக்கு தகுதியான விண்ணப்பத்தாரர் தங்களது கருத்துரு (விரிவான தன் விவர குறிப்பு, உரிய விவரங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்கள்) அடங்கிய (Booklet 4) தமிழ் 2 மற்றும் ஆங்கிலத்தில் 2 புத்தக வடிவத்தில் தயாரிக்கப்பட்டு, பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்டங்களிலும் திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து திருநங்கைகள், சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களை நேரில் அணுகி கருத்துருக்கள் சமர்பிக்க கருத்துருக்கள் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது. (https://awards.tn.gov.in) என்ற இணையதளம் மூலமாக வருகின்ற 31.12.2025 முதல் 18.02.2026 வரை பதிவேற்றம் (Upload) செய்து, செய்யப்பட்ட வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். விருது பெறத்தகுதியுள்ளவர் இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுவால் தெரிவு செய்யப்படுவார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**


புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai